**மோட்டார் வாகன விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம்,**

**சார்பு நீதிமன்றம், அரூர்**

முன்னிலை : - **திரு.R.விஜயன்,M.A.,B.L.,**

தலைமை அதிகாரி - மோட்டார் வாகன விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம்/சார்பு நீதிபதி, அரூர்

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25 ஆம் நாள் புதன்கிழமை

**மோ.கோ.அ.ம.எண்.25/2020**

CNR.No.TNDP10-000769-2019

முருகேசன், த/பெ. ராஜி, வயது சுமார் 38/2019, இந்து, வசிக்குமிடம் க.எண்.549, கைலாயபுரம் கிராமம், மாம்பட்டி அஞ்சல், அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம்.

.... மனுதாரர்

**// எதிராக//**

1. ராமன், த/பெ. சின்னராசு, வயது சுமார் 36, வசிக்குமிடம் க.எண்.2/159, வீரப்பநாயக்கன்பட்டி கிராமம் மற்றும் அஞ்சல், அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம்.

2. டாடா ஏ.ஐ.ஜி. ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட், முதல் தளம் ராஜேந்திர பில்டிங் துரைசாமி பிள்ளை தெரு, மேற்கு தாமரம் சென்னை - 600 045.

... எதிர்மனுதாரர்கள்

இந்த மனு 26.02.2026 ம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.வி.பொதிகைவேந்தன்,பி.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் அறிவிப்பை பெற்றுக்கொண்டும் நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜராகாத காரணத்தினால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜெ.சத்தியநாராயணன்,பி.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலினை செய்தும், இதுநாள் வரை என் பரிசீலினையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

1. கடந்த 09.04.2018 ம் தேதியில் நடந்த சாலை விபத்தில் காயமடைந்த மனுதாரர் இழப்பீடாக ரூ.5,00,000/- ம் கோரி இம்மனுவை 166 மோட்டார் வாகன சட்டம் 1998 ன் உடன்



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.03.25 17:16:08 +0530

இணைந்த விதி 3 தமிழ்நாடு மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை தீர்ப்பாய விதிகளின் கீழ் தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவின் விவரங்கள் பின்வருமாறு :-

| | | |
|---|---|---|
| 1. | காயமுற்றவரது பெயர் --- | முருகேசன் த/பெ. ராஜி |
| 2. | விபத்தின் போது காயமுற்றவரது வயது/பாலினம் --- | 38/ ஆண் |
| 3. | காயமுற்றவரது வேலை --- | கட்டிட மேஸ்திரி |
| 4. | காயமுற்றவரது மாத வருமானம் --- | ரூ.25,000/- |
| 5. | கோரியுள்ள இழப்பீட்டு தொகை --- | ரூ.5,00,000/- |
| 6. | உரிமை கோருபவரின் வங்கி கணக்கு விவரம் --- | முருகேசன்,<br>சேமிப்பு வங்கி கணக்கு<br>A/C.No.102901000004874.<br>பராமரிக்கப்படுவது,<br>இந்தியன் ஓவர்சியஸ் வங்கி,<br>அனுமந்தீர்த்தம். |
| 7. | நீதிமன்ற கட்டணம் --- | தற்போது நீதிமன்ற கட்டணம் ரூ.372.50/- செலுத்தப்பட்டது. (மீதி நீதிமன்ற கட்டணத்திற்கு தனியாக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.) |
| 8. | மனு தாக்கல் தேதி --- | 07.02.2020. |

2. **மனுவின் சுருக்கம்** : -

(i) மனுதாரர் கடந்த 09.04.2018-ந் தேதி காலை சுமார் 8.20 மணிக்கு மனுதாரரும், அவரது அக்கா காளியம்மாள் என்பவரும் மனுதாரருக்கு சொந்தமான வாகன பதிவு எண்.TN-24-A-5560 Yamaha Crux என்ற இருசக்கர வாகனத்தில் வேலைக்கு செல்ல தீர்த்தமலை - To அரூர் ரோடில் செல்லம்பட்டி பிரிவு ரோட்டில் சாலைவிதிகளை கடைபிடித்து ரோடின் இடதுபுற ஓரமாக வந்துகொண்டிருந்தபோது மனுதாரருக்கு முன்னால் சென்ற வாகனத்தின் பதிவு எண்.TN-29-BX-9551 Super Splendor என்ற இருசக்கர வாகனத்தை அதன் அதன் ஒட்டுநர் அதிவேமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும்,



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.03.25 17:16:11 +0530

ஆரன்அடிக்காமலும் எவ்வித சிக்கனும் செய்யாமலும், திடீரென பிரிவு ரோட்டில் திருப்பியப்போது மனுதாரர் அந்த வண்டியின் மீது மோதி விபத்து ஏற்பட்டதில் மனுதாரருக்கு இடது தோள்பட்டையில் உட்காயமும் முதுகு நெஞ்சு ஆகிய இடங்களில் ரத்தகாயமும், மற்றும் உடலில் பல்வேறு இடங்களில் ரத்தகாயமும் ஏற்பட்டது. உடனே மனுதாரரின் உறவினர் திருமூர்த்தி என்பவர் அழைத்து சென்று அரூர் அரசு மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சைக்கு சேர்த்தனர். பின்பு மேல் சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்ந்து சிகிச்சை பெற்றுவந்தார். அதன் பின் தொடர்ந்து வெளி நோயாளியாக இருந்து தனியார் மருத்துவமனையில் அவ்வப்பொழுது சிகிச்சை பெற்று வருகிறார்.

(ii) மேற்படி விபத்திற்கு காரணமான வாகனத்தை ஓட்டி வந்த 1-ம் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட வாகன ஓட்டுநர் மீது அரூர் காவல் நிலையத்தில் குற்ற எண்.192/2018 பிரிவுகள் 279, 337 இ.த.ச படி குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி விபத்தானது பதிவு எண்.TN-29-BX-9551 Super Splendor என்ற வாகனத்தை அதன் ஓட்டுநர் சாலை விதிகளை மதிக்காமல் அதிவேகமாகவும், அஜாகிரதையாகவும், எந்தவித சிக்கனலும் காட்டாமல் திடீரென வண்டியை திருப்பியதாலே இந்த விபத்து ஏற்பட்டது. விபத்து ஏற்படுத்திய வாகனம் 1-ம் எதிர்மனுதாரருக்கு உரிமையானதாகும். 2-ம் எதிர்மனுதாரர் 1-ம் எதிர்மனுதாரரின் வாகன காப்பீட்டுதாரர் ஆவார். எனவே மனுதாரருக்கு 1-ம் எதிர்மனுதாரரோ 2-ம் எதிர்மனுதாரரோ தனித்தனியாகவோ அல்லது சேர்ந்தோ இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

(iii) விபத்திற்கு முன்னர் மனுதாரர் நல்ல திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் இருந்து, கட்டிட மேஸ்திரியாக வேலை செய்து அதன் மூலம் மாதம் ரூ. 25,000/-க்கு மேல் சம்பாதித்து குடும்பத்தை நல்ல முறையில் காப்பாற்றி வந்தார். விபத்தினால் மனுதாரரால் எந்த வேலையும் செய்ய முடியாமலும், குடும்பத்தை பராமரிக்க முடியாமலும் இருந்து



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.03.25 17:16:14 +0530

வருகிறார். இவை அனைத்திற்கு எதிர்மனுதாரரே முழு பொறுப்பாவார்.

(iv) விபத்தின் தன்மை, மேற்படி விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட மனவேதனை வருமான இழப்புகள், மருத்துவ செலவுகள் குடும்ப சூழ்நிலை பணவீக்க விகிதம் கால சூழ்நிலைக்கேற்ப மாறும் வாழ்க்கைத்தரம் போன்ற பல்வேறு வகைகளிலும், மனுதாரர் கோரியுள்ள இழப்பீட்டு தொகை மிகவும் சரியானதும், நியாயமானதும் ஆகும். மேற்படி விபத்து குறித்து இழப்பீடு கோரி மனுதாரர் இதற்குமுன் வேறு எந்த நீதிமன்றத்திலும், மனு தாக்கல் செய்யவில்லை.

(v) விபத்தினால் மனுதாரருக்கு நிரந்தர ஊனம் ஏற்பட்டு எவ்வித வேலையும் செய்ய இயலாமல் வருமானம் இழப்பும், உடல் உபாதைகளும் ஏற்பட்டு நிரந்தரமான ஊனம் ஏற்பட்டுவிட்டது. மனுதாரர் அரூர் அரசு மருத்துவ முதல் உதவி சிசிசை பெற்று பின்பு மேல் சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனையில் மருத்துவம் செய்துக்கொண்ட வகையில் ரூ.1,00,000/- மேல் மருத்துவ செலவு ஏற்பட்டுள்ளது. மேலும் வருங்கால மருத்து செலவாக ரூ. 50,000/- செலவாகும் சூழ்நிலை உள்ளது. விபத்தினால் ஏற்பட்ட நிரந்தர ஊனத்தினால் மனுதாரருக்கு வருமான இழப்பு ரூ.1,00,000/-ஏற்பட்டுள்ளது. மேலும் மருத்துவமனைக்கு சென்று வந்த வகையில் போக்குவரத்து செலவுகள் ரூ.20,000/- ம் ஊட்டசச்சத்து மற்றும் இதர செலவுகள் ஏற்பட்டுள்ளது. மேற்படி செலவினங்களுக்கு மேற்படி விபத்து ஏற்படுத்திய வண்டியின் உரிமையாளர் என்ற முறையிலும், விபத்து ஏற்படுத்தியவர் என்ற முறையிலும் எதிர்மனுதாரர் முழுப்பொறுப்பாளியாவார். ஆகவே கனம் கோர்ட்டாவர்கள் தயவு செய்து மேற்படி விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட வலி வேதனை, மருத்துவ செலவுகள், வருங்கால மருத்து செலவுகள், எதிர்கால வருமான இழப்பு, ஊட்டசச்சத்து செலவு, மருத்துவமனையில் உடன் இருந்தவர்களுக்கான செலவு, இவற்றிற்கு எல்லாம் மொத்தம் இழப்பீடாக ரூ. 5,00,000/- (ரூபாய் ஐந்து லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மனு தாக்கல் செய்த



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.03.25 17:16:16 +0530

தேதி முதல் 12% வட்டி மற்றும் செலவுத் தொகையுடன் 1,2 எதிர்மனுதார்களிடமிருந்து மனுதாரருக்கு கிடைக்க தக்க உத்திரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் மனுதாரர் மனுவில் கூறியுள்ளார்.

3. **2 ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்** :-

(i) மனுதாரர் மனு பொய் சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல தள்ளுபடியாக தக்கது. இந்த எதிர்மனுதாரர் நேரடியாக ஒப்புக் கொண்ட சங்கதிகள் தவிர மற்ற அம்சங்களை மனுதாரர் கண்டிப்பாக நிரூபிக்க கடமைப்பட்டவர். மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யான சங்கதிகளாகும். வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டவை.

(ii) மனுவில் கூறப்பட்டுள்ளபடி 1ம் எதிர்மனுதாரரின் Super Splendor இருசக்கர வாகனம், பதிவு எண்.TN-29-BX-9551 சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாக கூறியுள்ள குறிப்பு முற்றிலும் பொய்யானது என இந்த 2 ம் எதிர்மனுதாரர் மறுக்கிறார். மேலும், குறித்த வாகனம் மேற்கண்ட விபத்தில் சம்பந்தப்பட்டதாக கூறப்படுவது முற்றிலும் தவறானது என இந்த எதிர்மனுதாரர் வலுவாக மறுக்கிறார்.

(iii) மேலும், முதல் தகவல் அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்ட வாகனத்தின் பதிவு எண்.TN-29-BX-9557 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 1ம் எதிர்மனுதாரரின் பதிவுச்சான்றிதழ் புத்தகத்தில் குறிப்பிட்ட வாகனத்தின் பதிவு எண்.TN-29-BX-9551 என குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விரு எண்களும் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன. இதனால் கூறப்படும் விபத்து உண்மையானது அல்ல என்பது தெளிவாகிறது. மேலும், மேற்கண்ட விபத்தில் 1ம் எதிர்மனுதாரரின் Super Splendor இருசக்கர வாகனம் (Regn.No. TN-29-BX-9551) மற்றும் எதிர் தரப்பின் Yamaha Crux இருசக்கர வாகனம் (Regn.No.TN-24-A-5560) சம்பந்தப்பட்டதாக நிரூபிக்கும் Motor Vehicle Inspector Report எதுவும் தாக்கல்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.03.25 17:16:19 +0530

செய்யப்படவில்லை.

(iv) மேலும், இறுதி அறிக்கையின் படி Harur Police இந்த வழக்கை Mistake of Fact எனக் குறிப்பிட்டு முடித்துள்ளனர். ஆகையால், இந்த 2ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எந்தவித இழப்பீடும் வழங்க வேண்டிய பொறுப்பு இல்லை. மேலும், மனுதாரர் Yamaha Crux இருசக்கர வாகனம் (Regn.No.TN-24-A-5560) என்பதின் உரிமையாளர் அல்ல என்பதும் தெரிய வருகிறது. மேலும், சம்பவம் நடைபெற்றதாக கூறப்படும் நேரத்தில் மனுதாரருக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதும் தெரியவருகிறது. இது மோட்டார் வாகன விதிமுறைகளை மீறுவதாகும். மனுதாரர் பயணித்ததாக கூறப்படும் Yamaha Crux இருசக்கர வாகனம் (Regn.No.TN-24-A-5560) என்பதின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டாளர் இவ்வழக்கில் அவசியமான தரப்பினர்கள் ஆவர். அவர்கள் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்படாததால், அவசியமான தரப்பினர்கள் சேர்க்கப்படாத குறைபாடால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

(v) முதற்கட்டமாக, விபத்தில் சம்பந்தப்பட்டதாக கூறப்படும் 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் சம்பவம் நிகழ்ந்த காலத்தில் இந்த எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்பதை மனுதாரர் நிரூபிக்க வேண்டும். மேலும், 1ம் எதிர்மனுதாரர் அந்த வாகனத்தின் உரிமையாளர் என்பதையும், அந்த வாகனம் அனுமதிக்கப்பட்ட நோக்கத்திற்கே பயன்படுத்தப்பட்டதையும், விபத்து நேரத்தில் வாகனத்திற்கு செல்லுபடியாகும் Fitness Certificate இருந்ததையும், ஓட்டுநருக்கு செல்லுபடியாகும் ஓட்டுனர் உரிமம் இருந்ததையும் மனுதாரர் நிரூபிக்க வேண்டும். இவை நிரூபிக்கப்பட்ட பிறகே இந்த எதிர்மனுதாரருக்கு எந்தவித பொறுப்பும் விதிக்க முடியும்.

(vi) மேலே கூறியவற்றுக்கு எந்தவித பாதிப்பும் இல்லாமல், மனுதாரர் விபத்தில் பெற்றதாக கூறப்படும் காயங்கள், அதற்காக பெற்ற சிகிச்சை மற்றும் அதற்காக



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.03.25 17:16:21 +0530

செலவழிக்கப்பட்ட தொகை ஆகியவை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அவற்றை உரிய ஆவணங்கள் மூலம் மனுதாரர் நிரூபிக்க வேண்டும். மேலும், மனுவின் Column No.13 & 13(a) மற்றும் Column 23 இன் (b) மற்றும் (c) பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிரந்தர ஊனமுற்ற தன்மை பற்றிய குறிப்பு பொய்யானது என மறுக்கப்படுகிறது. எப்படியாயினும், கூறப்படும் விபத்துக்குப் பின்னரும் மனுதாரர் தன்னுடைய தொழிலை தொடர்வதில் எந்தத் தடையும் இல்லை என்றும், எதிர்காலத்திலும் அவர் வேலை செய்வதில் எந்தவித தடை அல்லது இயலாமையும் இல்லை என்றும் தெரிகிறது. மேலும், மனுதாரரின் வருமான ஈட்டும் திறன் குறைந்ததாகவும் இல்லை.

(vii) மனுவில் மனுதாரரின் வயது, தொழில் மற்றும் மாத வருமானம் குறித்த குறிப்புகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அவற்றை உரிய ஆவணங்களின் மூலம் மனுதாரர் நிரூபிக்க வேண்டும். ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம்) இழப்பீடு கோரிக்கை மிகையாகவும் நிலைநிறுத்த முடியாததாகவும் உள்ளது. மனுவின் Column 21-A இல் பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரப்பட்டுள்ள இழப்பீட்டு தொகைகளும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. வருமான இழப்பு மற்றும் பகுதி வருமான இழப்பு குறித்த கோரிக்கைகள் அதிகப்படுத்தப்பட்டவை. மருத்துவமனைக்கு போக்குவரத்து செலவு மற்றும் கூடுதல் ஊட்டச்சத்து செலவு ஆகியவை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மருத்துவமனையில் மனுதாரரை கவனித்த உறவினர்களுக்கான செலவுகளும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மருத்துவச் செலவுகள் குறித்து கூறப்பட்டவை உரிய ரசீதுகள் மற்றும் பில்கள் மூலம் நிரூபிக்கப்பட வேண்டும். வலி மற்றும் வேதனை, மனவேதனை, நிரந்தர ஊனமுற்ற தன்மை மற்றும் எதிர்கால வருமான இழப்பு ஆகியவற்றுக்கான கோரிக்கைகள் மிகையாகவும் நிலைநிறுத்த முடியாதவையாகவும் உள்ளன.

(viii) மோட்டார் வாகனச் சட்டம், 1988, பிரிவு 140ன் விதிகள் இவ்வழக்கிற்கு



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.03.25 17:16:25 +0530

பொருந்தாது, ஏனெனில் அந்த விதியில் குறிப்பிடப்பட்டபடி எந்த நிரந்தர ஊனமுற்ற தன்மையும் மனுதாரருக்கு ஏற்படவில்லை. தேவையான பட்சத்தில், இந்த எதிர்மனுதாரர் கூடுதல் எதிருரை மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 170 ன் கீழ் மனு தாக்கல் செய்யும் உரிமையை வைத்துக் கொள்கிறார். இம்மனுவில் எந்தவித தகுதியும் இல்லை. ஆகவே கனம் கோர்ட்டார் அவர்கள் தயவு செய்து, மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று இந்த எதிர்மனுதாரர் பணிவுடன் வேண்டிக்கொள்கிறார்.

4. **இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சினைகள் என்ன எனில்:-**

**1. விபத்து TN-29-BX-9551 என்ற பதிவெண் கொண்ட Super Splendor இருசக்கர வாகன ஓட்டுநரின் கவனக்குறைவாலும் அஜாக்கிரதையாலும் ஏற்பட்டதா? அல்லது மனுதாரரின் கவனக்குறைவினால் ஏற்பட்டதா?**

**2. மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதா? அவ்வாறெனில் இழப்பீடு யாரால் கொடுக்கப்பட வேண்டும்?**

**3. மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதெனில், அவ்வாறு கிடைக்கத்தக்க இழப்பீட்டின் அளவு என்ன?**

**4. மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் என்ன?**

5. இம்மனுவில் மனுதாரார் தரப்பில் மனுதாரரே ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. நீதிமன்ற தரப்பில் நீ.ம.சா.ஆ.1 ஆவணமும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. **தீர்வுக்குரிய பிரச்சினை -1**

**விபத்து TN-29-BX-9551 என்ற பதிவெண் கொண்ட Super Splendor இருசக்கர**



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.03.25 17:16:28 +0530

**வாகன ஓட்டுநரின் கவனக்குறைவாலும் அஜாக்கிரதையாலும் ஏற்பட்டதா? அல்லது மனுதாரரின் கவனக்குறைவினால் ஏற்பட்டதா?**

7. மனுதாரர் ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், தான் கடந்த 09.04.2018-ந் தேதி காலை சுமார் 8.20 மணிக்கு தானும், தனது அக்கா காளியம்மாள் என்பவரும் சொந்தமான வாகன பதிவு எண்.TN-24-A-5560 Yamaha Crux என்ற இருசக்கர வாகனத்தில் வேலைக்கு செல்ல தீர்த்தமலை வழ அரூர் ரோடில் செல்லம்பட்டி பிரிவு ரோட்டில் சாலைவிதிகளை கடைபிடித்து ரோடின் இடதுபுற ஓரமாக வந்து கொண்டிருந்த போது தனக்கு முன்னால் சென்ற வாகனத்தின் பதிவு எண்.TN-29-BX-551 Supper Splendor என்ற இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுநர் அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், ஆரண் அடிக்காமலும் எவ்வித சிக்கனலும் செய்யாமலும், திடீரென பிரிவு ரோட்டில் திருப்பியப்போது நான் அந்த வண்டியின் மீது மோதி விபத்து ஏற்பட்டத்தில் தனக்கு இடது தோள்பட்டையில் உட்காயமும் முதுகு நெஞ்சு ஆகிய இடங்களில் ரத்த காயமும் மற்றும் உடலில் பல்வேறு இடங்களில் ரத்த காயமும் ஏற்பட்டது என்றும், உடனே தன் உறவினர் திருமூர்த்தி என்பவர் அழைத்து சென்று அரூர் அரசு மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சைக்கு சேர்த்தனர் என்றும், பின்பு மேல் சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்த்து சிகிச்சை பெற்று வந்தேன் என்றும், அதன் பின் தொடர்ந்து வெளி நோயாளியாக இருந்து தனியார் மருத்துவமனையில் அவ்வப்பொழுது சிகிச்சை பெற்று வருகிறேன் என்றும், மேற்படி விபத்திற்கு காரணமான வாகனத்தை ஓட்டி வந்த 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட வாகன ஒட்டுநர் மீது அரூர் காவல் நிலையத்தில் குற்ற எண்.192/2018 பிரிவுகள் 279, 337 இ.த.ச படி குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் தனது சாட்சியத்தில் கூறியுள்ளார்.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.03.25 17:16:31 +0530

8. மனுதாரர் தரப்பில் முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த முதல் தகவல் அறிக்கையில் TN-29-BX-9551 என்ற பதிவெண் கொண்ட Super Splendor இருசக்கர வாகன ஓட்டுநர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் முதல் தகவல் அறிக்கையானது TN-29-BX-9557 என்ற பேஷன் புரோ வாகனம் மோதியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு சான்றிதழ் ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் TN-29-BX-9551 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கைக்கும், ம.சா.ஆ.3 பதிவுச் சான்றிதழுக்கும் வேறுபாடு உள்ளது. மனுதாரர் மனுவில் TN-29-BX-9551 என்ற வாகனம் தான் விபத்து ஏற்படுத்தியதாக கூறியுள்ளார். முதல் தகவல் அறிக்கைக்கும் மனுதாரர் கூறுவதற்கும் வேறுபாடுகள் உள்ளது. எந்த வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்பது மனுதாரர் தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று வாதிடப்பட்டது. இவை குறித்து பார்க்கும்போது ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் விபத்து ஏற்படுத்திய வாகனம் TN-29-BX-9557 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் விபத்து ஏற்படுத்திய வாகனம் TN-29-BX-9551 என்ற Super Splender இருசக்கர வாகன ஓட்டுநர் கவனக்குறைவால் ஏற்பட்டதாக என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.4 காப்பீட்டு சான்றானது TN-29-BX-9551 என்ற வாகனத்தின் காப்பீட்டு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த காப்பீட்டு சான்றிதழ் நடைமுறையில் உள்ளது 12.04.2019 ல் இருந்து 11.04.2020 தேதி வரை. மேற்படி காப்பீட்டு சான்றும் விபத்து தேதியான 09.04.2018 ல் நடைமுறையில் இல்லை. ஆகவே முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இருசக்கர வாகனம் TN-29-BX-9557 என்ற வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.03.25 17:16:33 +0530

ஏற்பட்டதா? அல்லது மனு மற்றும் சாட்சியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள TN-29-BX-9551 என்ற வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதா? என்பது குறித்து வேறு எந்த ஆவணங்களும் தாக்கல் செய்து மனுதாரர் தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை. எந்த வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்பதை மனுதாரர் நிரூபிக்காமல் 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் தான் விபத்து ஏற்படுத்தியது என்பதையும் மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடுவது ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் உள்ளது. ஆகவே மனுதாரர் தரப்பில் TN-29-BX-9557 என்ற இருசக்கர வாகனத்தின் ஓட்டுநரால் விபத்து ஏற்பட்டதா அல்லது TN-29-BX-9551 என்ற இருசக்கர வாகனத்தின் ஓட்டுநரால் விபத்து ஏற்பட்டதா என்பது நிரூபணம் செய்யப்படவில்லை என்று பிரச்சனை-1 க்கு இந்த தீர்ப்பாயம் தீர்வு காண்கிறது.

9. <u>**தீர்வுக்குரிய பிரச்சினை 2 :-**</u>

**மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதா? அவ்வாறெனில் இழப்பீடு யாரால் கொடுக்கப்பட வேண்டும்?**

10. மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்து எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN-29-BX-9551 என்ற பதிவெண் கொண்ட Super Splendor இருசக்கர வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்பதை மனுதாரர் தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று பிரச்சனை-1ல் முடிவு செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.4 இன்சூரன்ஸ் பாலிசியை பரிசீலனை செய்து பார்க்கும்போது TN-29-BX-9551 என்ற பதிவெண் கொண்ட Super Splendor இருசக்கர வாகனத்திற்க்கு 12.04.2019 முதல் 11.04.2020 வரை காப்பீடு உள்ளது என்பதும், விபத்து தேதியான 09.04.2018 ல் காப்பீடு நடைமுறையில் இல்லை என்பதும் ம.சா.ஆ.4 ல் இருந்து தெரியவருகிறது. ஆகவே 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்பதை மனுதாரர் தரப்பில் நிரூபிக்காத நிலையிலும், விபத்து



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.03.25 17:16:37 +0530

சமயத்தில் 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் விபத்து ஏற்படுத்திய வாகனத்திற்கான காப்பீடு இல்லை என்பதாலும், மனுதாரருக்கு எந்த இழப்பீடும் கிடைக்கத்தக்கதல்ல என்று இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

11. **<u>தீர்வுக்குரிய பிரச்சினை 3:-</u>**

**மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதெனில் மனுதாரருக்கு கிடைக்கத்தக்க இழப்பீட்டின் அளவு என்ன?**

12. மனுதாரருக்கு இழப்பீடு எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்று இந்த தீர்ப்பாயம் முடிவு செய்துள்ள நிலையில் இழப்பீட்டின் அளவு குறித்து தீர்மானிக்க வேண்டிய அவசியம் இல்லை என இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

13. **<u>தீர்வுக்குரிய பிரச்சினை-4</u>**
**மனுதாரருக்கு கிடைக்கத்தக்க வேறு பரிகாரங்கள் என்ன?**

14. மனுதாரருக்கு எந்த இழப்பீடும் கிடைக்கத்தக்கதல்ல என்று இந்த தீர்ப்பாயம் முடிவு செய்துள்ள நிலையில் மனுதாரருக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றும் இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

15. **இறுதியாக**, இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை. மனுதாரர் செலுத்த வேண்டிய எஞ்சிய நீதிமன்ற கட்டணம் ரூ.4,000/- (ரூபாய் நான்காயிரம் மட்டும்) இவ்வுத்தரவு தேதியிலிருந்து ஒரு மாதகாலத்திற்குள் செலுத்த மனுதாரருக்கு உத்தரவிடப்படுகிறது.

16. **2020(4) CTC 272, M/S. Cholamandalam Ms Genl Ins Co Ltd vs Mr. Ayyannar S** என்ற மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் படி இவ்வழக்கில் தீர்ப்பாணை தயாரிக்கப்படவில்லை.

இந்த உத்திரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் உடனுக்குடன் பிழை நீக்கம்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.03.25 17:16:41 +0530

செய்யப்பட்ட பின்னர் 2025ம் ஆண்டு மார்ச் திங்கள் 25ம் நாளான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.03.25 17:16:45 +0530

சார்பு நீதிபதி, அரூர்.

மோட்டார் வாகன விபத்து கோரிருமை தீர்ப்பாயம்.

**மனுதாரர் தரப்பில் சாட்சி:-**

| | |
|---|---|
| ம.சா.1 | முருகேசன் (மனுதாரர்) |

**மனுதாரர் தரப்பில் சான்றாவணங்கள்: -**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 09.04.2018 | முதல் தகவல் அறிக்கை - ஒளிப்பட நகல் |
| ம.சா.ஆ.2 | 09.04.2018 | மனுதாரருக்கு அரூர் அரசு மருத்துவமனையில் வழங்கிய விபத்து பதிவேடு - ஒளிப்பட நகல் |
| ம.சா.ஆ.3 | 10.05.2017 | விபத்து ஏற்படுத்திய வண்டியின் ஆர்.சி. - ஒளிப்பட நகல் |
| ம.சா.ஆ.4 | 12.04.2019 | விபத்து ஏற்படுத்திய வண்டியின் இன்சூரன்ஸ் பாலிசியை - ஒளிப்பட நகல் |
| ம.சா.ஆ.5 | --- | மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் - ஒளிப்பட நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| ம.சா.ஆ.6 | --- | மனுதாரரின் ஆதார் அட்டை - ஒளிப்பட நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |

**எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணம்: -**

---இல்லை---

**நீதிமன்ற தரப்பில் சான்றாவணம் :-**

| | | |
|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | --- | மனுதாரரின் ஊனச்சான்று - அசல் |

R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.03.25 17:16:48 +0530

சார்பு நீதிபதி, அரூர்.

மோட்டார் வாகன விபத்து கோரிருமை தீர்ப்பாயம்.